## TTE பரிசோதனைக்குத் தயார்ப்படுத்துதல்

1. தனித்தனி மேல்சட்டையும் கால்சட்டையும் அணிந்துகொண்டு வரவும்.
2. நீங்கள் தினமும் உட்கொள்ளவேண்டிய மருந்துகள் இருந்தால், வழக்கம்போல உட்கொள்ளலாம்.
3. பரிசோதனைக்கு முன்பாக வழக்கம்போல சாப்பிடலாம், குடிக்கலாம்.

## உத்தேச அபாயங்கள் என்ன?

TTE பரிசோதனையில் பயன்படுத்தப்படும் ஊடொலி படமெடுப்பு மிகவும் பாதுகாப்பானது. இதனால் விபரீத விளைவுகள் நேர்ந்ததில்லை. கர்ப்பிணி பெண்களின் கருவிலுள்ள குழந்தைகளைப் படமெடுப்பதற்காக வழக்கமாகப் பயன்படுத்தப்படும் அதே வகையான ஊடொலி பரிசோதனை இது. இதயத்தைப் படமெடுப்பதற்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஊடொலி கருவி இதற்குப் பயன்படுத்தப்படுவது மட்டுமே வேறுபாடு.

## முடிவுகள் எனக்கு எப்போது தெரியவரும்?

TTE பரிசோதனையின் முடிவுகளும், உங்களுக்கான அடுத்த கட்ட சிகிச்சையும், உங்கள் மருத்துவருடனான அடுத்த சந்திப்பின்போது கலந்து பேசப்படும்.

**மாடி 3 TTSH மருத்துவ நிலையம்**

- இதய சிகிச்சை நிலையம்
- 3A (இதய சிகிச்சை, இதய அசைவியக்கச் சேவைகள், இதய மறுவாழ்வு உடற்பயிற்சிக்கூடம்)
- 3B (இதய ஏட்ரியம், இதய படமெடுப்பு நிலையம்)

**மாடி 3 அவசர சிகிச்சைப்பிரிவு (A&E) கட்டடம்**

- இதய ஊடுருவல் ஆய்வுக்கூடம்

**தொடர்புக்கு:**

6537 7000 (அனைத்து முன்பதிவுகளுக்கும்)

Scan the QR Code with your smart phone to access the information online or visit https://www.ttsh.com.sg/Patients-and-Visitors/Medical-Services/Cardiology/Pages/default.aspx

Tan Tock Seng HOSPITAL
National Healthcare Group


*©டான் டோக் செங் மருத்துவமனை, சிங்கப்பூர் 2020. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. எல்லா விவரங்களும் மார்ச் 2020 நிலவரப்படி சரியானவை. இந்த ஆவணத்தின் எந்தவொரு பகுதியும் டான் டோக் செங் மருத்துவமனையிடம் முன் அனுமதி பெறாமல் மறுபதிப்பு செய்யப்படவோ, நகலெடுக்கப்படவோ, திரித்து தொகுக்கப்படவோ, தழுவப்படவோ, விநியோகிக்கப்படவோ, வர்த்தக ரீதியில் பயன்படுத்தப்படவோ, காட்சிக்கு வைக்கப்படவோ அல்லது தரவுத்தளத்தில், பயன்படுத்தக்கூடிய கோப்புத்தளத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்படவோ அல்லது ஏதேனும் வடிவத்தில் அனுப்பப்படவோ கூடாது. இந்த ஆவணத்தில் உள்ள எல்லா விவரங்களும் கூறுகளும் தகவலளிக்கும் நோக்கத்திற்கானவை மட்டுமே. உங்களது சொந்த மருத்துவர் அல்லது மற்ற மருத்துவ நிபுணர்கள் அளிக்கும் ஆலோசனைக்கு இவற்றை மாற்றாகப் பயன்படுத்தக்கூடாது.*

PECC-CVM-ED-2020-752T-v1

Tan Tock Seng HOSPITAL

## இதய சிகிச்சைப் பிரிவு

# நெஞ்சுக்கூடு மின்னொலி இதய வரைவு பரிசோதனை (TTE)



## நெஞ்சுக்கூடு மின்னொலி இதய வரைவு பரிசோதனை என்பது என்ன?

நெஞ்சுக்கூடு மின்னொலி இதய வரைவு (TTE) பரிசோதனையில் இதயத்தின் அமைப்புமுறையும் இயக்கமும் ஆராயப்படுகிறது. இந்தப் பரிசோதனை, ஊடொலியைப் பயன்படுத்தி இதயத்தின் அசைவுகளை நிகழ்நேரத்தில் பல்வேறு கோணங்களிலிருந்து படமெடுத்து, ஆராய்வுக்காகக் கணினியில் பதிவு செய்கிறது. இந்தப் படங்களின்வழி, பின்வருபவற்றை நாம் பரிசீலிக்க முடியும்:

1. இதயம் வழக்கம்போலத் துடிக்கிறதா
2. இதயத்தின் அளவு வழக்கமான அளவில் உள்ளதா
3. இதயத்தின் 4 அடைப்பிதழ்களும் சரியாக இயங்குகின்றனவா
4. இதயத்தில் ஓட்டை போன்ற வேறு ஏதேனும் அமைப்பியல் பிரச்சனைகள் உள்ளதா

## TTE பரிசோதனையின் நோக்கம் என்ன?

இதய இரத்தக்குழாய் நோய் உள்ளவர்களின் இதயத் தசையின் நிலையையும் இயக்கத்தையும் பரிசீலிப்பதற்கு, குறிப்பாக மாரடைப்புக்குப் பிறகு பரிசீலிப்பதற்கு, TTE பரிசோதனை பல சமயங்களில் பயன்படுத்தப்படுகிறது. இதய முணுமுணுப்புக்கான காரணத்தைக் கண்டறிவதற்கு இந்தப் பரிசோதனை பெரிதும் உதவும்.

இதய முணுமுணுப்பு என்பது இதயத்தின் ஊடாகச் செல்லும் இரத்த ஓட்டத்தின் வழக்கத்திற்கு மாறான ஒலியாகும். இதய முணுமுணுப்பு ஆபத்தில்லாததாக இருக்கலாம் என்றாலும், இதய அடைப்பிதழ்களில் கசிவு அல்லது குறுகல் போன்ற இதயப் பிரச்சனைகளை இது குறிக்கக்கூடும்.

பின்வரும் பிரச்சனைகள் உள்ள நோயாளிகள், அவற்றுக்கான காரணங்களை அடையாளம் காண்பதற்காக TTE பரிசோதனைக்கு அனுப்பப்படலாம்:
நெஞ்சு வலி

- மூச்சுத்திணறல்
- இதயப் படபடப்பு
- மயக்கமடைதல்
- வழக்கத்திற்கு மாறான இதய மின்துடிப்பளவு (ECG)
- இதய எக்ஸ்-ரே படங்களில் வழக்கத்திற்கு மாறான இதய நிழல்கள்

## TTE பரிசோதனையில் நான் எதிர்பார்க்கவேண்டியவை என்ன?


இந்தப் பரிசோதனை, ஊடுருவல் இல்லாத இதய ஆய்வுக்கூடத்தில் செய்யப்படும். பரிசோதனைக்குச் சுமார் 30 முதல் 40 நிமிடங்கள் எடுக்கும். பரிசோதனைக்காக நீங்கள் படுக்கைப்பிரிவில் தங்கியிருக்க வேண்டியதில்லை. பரிசோதனைக்குப் பிறகு நீங்கள் வீடு திரும்பலாம்.

**பரிசோதனைக்கு முன்**
பரிசோதனை செய்வதற்காக, ஆண் நோயாளிகளிடம் சட்டைகளைக் கழற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படும். பெண் நோயாளிகள் சிறப்பு அங்கிகளை அணியுமாறு கேட்டுக்கொள்ளப்படலாம். மின்னொலி இதய வரைவின்போது நீங்கள் இடதுபக்கமாகப் படுத்திருக்கவேண்டும்.


**பரிசோதனையின்போது**
நீரில் கரையக்கூடிய களிம்பு உங்கள் நெஞ்சில் தடவப்படும். கையடக்கமான சிறிய ஊடொலி பரிசோதனைக் கருவி உங்கள் நெஞ்சின்மீது வைக்கப்பட்டு, இதயத் தசைகள் படமெடுக்கப்படும். இதயத்தின் எல்லா பகுதிகளையும் பார்க்கும் வகையில், நெஞ்சின் பல்வேறு பகுதிகளிலிருந்து படங்கள் எடுக்கப்படும். இடையிடையில் "வூஷிங்" சத்தம் கேட்கும். ஊடொலி இயந்திரம் இதயத்தின் இரத்த ஓட்டத்தைக் குறியிடும்போது இந்த ஒலி கேட்கும். தெளிவான படங்களை எடுப்பதற்காகக் கருவியை நெஞ்சில் அழுத்தும்போது ஓரளவு அசௌகரியம் ஏற்படலாம். உங்கள் இதயத்துடிப்பைக் கண்காணிப்பதற்காகவும், எடுக்கப்படும் படங்களை இதயத்துடிப்புடன் வெவ்வேறு பகுதிகளுடன் பொருத்தமாக இணைப்பதற்காகவும் இதய மின்துடிப்பளவு மின்முனைகள் உங்கள்மீது ஒட்டப்பட்டிருக்கும்.

வெளிப்புற விளக்கொளியின் கூசொளி இல்லாமல் படங்களைப் பார்ப்பதற்காக, TTE பரிசோதனையின்போது அறை வழக்கமாக இருட்டாக்கப்படும்.

**இந்தப் பரிசோதனையில் ஒருவரது இதயத்தின் இரத்தக்குழாய்களைப் பார்க்க முடியாது. ஆனால், மாரடைப்பால் அல்லது வேறு இதய நோயால் சேதமடைந்திருக்கக்கூடிய இதயத் தசைகளைப் பார்க்கமுடியும்.**



TTE பரிசோதனை செய்யப்படுகிறது



மேல்படம்: இதய அடைப்பிதழ் இயக்கத்தைப் பரிசீலிப்பதற்கான நிறமேற்ற டாப்ளர்.
கீழ்படம்: ட்ரைகஸ்பிட் அடைப்பிதழில் உள்ள கசிவை ஆராயும் நிறப்பட்டை டாப்ளர்.



நெஞ்சின் இடதுபக்கத்திலிருந்து இதயத்தின் 4 அடைப்பிதழ்களின் தோற்றம்